**SENGUNTHAR**

# Daily News

**27-05-2026/SEC/DN/411**




## திருச்செங்கோடு அருள்மிகு கைலாசநாதர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சொக்கப்ப முதலியார் அரங்கத்தில் 46ஆம் ஆண்டு கம்பன் விழா.






திருச்செங்கோடு அருள்மிகு கைலாசநாதர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள சொக்கப்ப முதலியார் அரங்கத்தில் 46ஆம் ஆண்டு கம்பன் விழா கடந்த 27 மற்றும் 28ஆம் தேதிகளில் இலக்கியச் சிறப்புடன் சிறப்பாக நடைபெற்றது. கம்பன் கழகம், திருச்செங்கோடு சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு செங்குந்தர் கல்வி நிறுவனங்களின் செயலாளர் மற்றும் தாளாளர் பேராசிரியர் அ. பாலதண்டபாணி ஐயா அவர்கள் தலைமை தாங்கி சிறப்பாக வழிநடத்தினார். தமிழின் இலக்கிய மரபை உயர்த்திப் பேணும் வகையில் நடைபெற்ற இவ்விழாவில் தமிழறிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை ரசித்தனர்.

முதல் நாள் நிகழ்ச்சி 27.05.2026 புதன்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்ச்சியில் “தெய்வத்தின் தெய்வம்” என்ற தலைப்பில் நடைபெற்ற சிந்தனை அரங்கில் “கலைமாமணி” நாவேந்தர் திரு. நாகை முகுந்தன் அவர்கள் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து “செவிநுகர் கனிகள்” என்ற தலைப்பில் நடைபெற்ற பைந்தமிழ் முரசு நிகழ்ச்சியில் திரைப்பட இயக்குனர் திரு. பாரதி கிருஷ்ணகுமார் அவர்கள் இலக்கிய நயம் மிக்க உரையாற்றி பார்வையாளர்களை கவர்ந்தார். நிகழ்ச்சியின் நிறைவாக கம்பன் கழக செயலாளர் திரு. பி. செங்குட்டுவன் M.Sc., அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 28.05.2026 வியாழக்கிழமை நடைபெற்றது. “கம்பன் காவியத்தில் நம்மைப் பெரிதும் ஈர்ப்பது அன்பின் வலிமையா? அல்லது அறத்தின் பெருமையா?” என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு “கம்பவாரிதி” திரு. இலங்கை ஜெயராஜ் அவர்கள் நடுவராக இருந்து சிறப்பாக வழிநடத்தினார்.

“அன்பின் வலிமையே” என்ற அணியின் சார்பில் கவிஞர் மரபின் மைந்தன் திரு. முத்தையா (கோவை), முனைவர் திருமதி உலகநாயகி பழனி (சென்னை) ஆகியோர் கருத்துரையாற்றினர். “அறத்தின் பெருமையே” என்ற அணியின் சார்பில் முனைவர் திருமதி விஜயசுந்தரி (திருச்சி), செந்தமிழ்த்திலகம் பேராசிரியர் திரு. ரா. ராஜ்குமார் (ராஜபாளையம்) ஆகியோர் தங்களது வாதங்களை இலக்கிய நயத்துடன் எடுத்துரைத்தனர். பட்டிமன்றம் முழுவதும் சிந்தனையூட்டும் கருத்துக்கள், நகைச்சுவை கலந்த உரைகள் மற்றும் கைதட்டல்களால் அரங்கம் முழுவதும் உற்சாகம் நிலவியது.

தொடர்ந்து நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் டாக்டர் T.O. சிங்காரவேல் M.Sc., Ph.D. அவர்களுக்கு “ஆன்மீகத் தென்றல் விருது” வழங்கப்பட்டது. இவ்விருதை திரு. இலங்கை ஜெயராஜ் அவர்கள் தனது திருக்கரங்களால் வழங்கி சிறப்பித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவாக கம்பன் கழக இணைச் செயலாளர் திரு. த. சண்முகசுந்தரம் B.Com., M.B.A., அவர்கள் நன்றியுரை வழங்கினார். இரண்டு நாட்களும் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நம் கல்லூரியிலிருந்து திரளான மாணவர்கள் கலந்து கொண்டு இலக்கிய சொற்பொழிவுகளையும் பட்டிமன்றத்தையும் ஆர்வமுடன் கண்டு ரசித்தனர். கம்பனின் காவியச் செழுமையையும் தமிழின் இலக்கியப் பெருமையையும் எடுத்துரைத்த இக்கம்பன் விழா அனைவரின் பாராட்டையும் பெற்றது.

SENGUNTHAR
Daily News
27-05-2026/SEC/DN/411

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



**குறள் 771:**
**என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை முன்நின்று கல்நின் றவர்.**
**விளக்கம்:**
**பகைவரே! என் தலைவனின் முன்னே எதிர்த்து வந்து நில்லாதீர்; அவன் முன்னர் எதிர்த்து வந்து நின்று, களத்தில் வீழ்ந்துபட்டு, நடுகற்களாக நிற்பவர் மிகப் பலர்**

## இலக்கணக் குறிப்பறிதல்

இனம் குறித்தல்" இலக்கணக் குறிப்பு, ஒரு சொல் அல்லது சொற்றொடர் மூலம் ஒரு குறிப்பிட்ட இனத்தை அல்லது இனக் குழுவை குறிப்பதை குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, "தமிழர்", "ஆரியர்" போன்ற சொற்கள் இனக் குறிப்பகளாகும்.

விளக்கம்:
இனம்:
ஒரு குறிப்பிட்ட இனத்தை அல்லது இனக் குழுவைச் சேர்ந்த நபர்களைக் குறிக்கும் சொல்.
இனக் குறித்தல்:
ஒரு சொல் அல்லது சொற்றொடர் மூலம் இனத்தை குறித்தல்.
எடுத்துக்காட்டுகள்:
"தமிழர்" என்பது ஒரு இனத்தைக் குறிக்கும் சொல்.
"ஆரியர்" என்பது ஒரு இனக் குழுவை குறிக்கும் சொல்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

**பிறமொழி: அண்டம் தமிழ்மொழி: உலகம்**


SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU